2013 ஏப்ரல் 15]

அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைக் கூறி, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 217, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

217—

நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு

***5717—திருமதி த. இந்திராகாந்தி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, துறையூர் ஒன்றியம், பச்சைமலை பகுதியில் நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவரின் தொகுதிக்குட்பட்ட துறையூர் ஒன்றியத்திலே இருக்கின்ற பச்சைமலை பகுதியிலே, நடமாடும் கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். ஒரு கால்நடை கிளை நிலையமோ, ஒரு மருந்தகமோ, ஒரு மருத்துவமனையோ அமைக்க முடியாத பகுதிகளுக்குத்தான் எங்கள் துறையின் மூலமாக நடமாடும் கால்நடை மருத்துவமனையை அனுப்பி அங்கே சிகிச்சைகளை செய்து வருகிறோம். உறுப்பினர் குறிப்பிடுகின்ற பச்சைமலை பகுதியிலே அரசின் விதிகளுக்குட்பட்டு 3,000–க்கும் அதிகமாக கால்நடைகள் இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அங்கே ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தங்களின்வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

[2013 ஏப்ரல் 15

திருமதி த. இந்திராகாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோதனைகளைச் சாதனைகளாக்கி, சாதனைகளைச் சரித்திரங்களாக மாற்றி, எண்ணிலா திட்டங்கள்மூலம் தமிழனை தலை நிமிரச் செய்த தங்கத் தாரகையே, புதிய வரலாறு படைக்கும் புரட்சியின் வடிவமே, (மேசையைத் தட்டும் ஒலி) மக்களாட்சி நடத்தி வரும் மனிதர்குல மாணிக்கமே, கால்நடைகளுக்கும் கனிவு காட்டி வெண்மைப் புரட்சி தந்த வெண்தாமரையே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களே, தங்களின் பொற்பாதம் வணங்கி, துறையூர் தொகுதிக்குட்பட்ட பச்சை மலைவாழ் மக்களின் நலன் கருதி, பச்சைமலையை பசுமை சுற்றுலாத் தலமாக அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாக கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பச்சைமலைவாழ் மக்களுக்கு கால்நடை கிளை நிலையம் அமைத்துக் கொடுக்க முன்வந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைச் சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

திரு. கு. லிங்கமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியம், அரவட்லா மலை கிராமம் கால்நடைகள் நிறைந்த பகுதி. அந்த அரவட்லா மலை கிராமத்திற்கு ஒரு கால்நடை துணை நிலையம் அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தக் கிராமத்திலே கால்நடை துணை நிலையம் அமைப்பதற்குரிய விதிகளுக்கு உட்பட்டு, அங்கே 3,000 கால்நடை அலகுகளுக்கு மிகைப்பட்டு இருக்கும் என்று சொன்னால், பின்தங்கிய துறையாக இருந்த கால்நடை பராமரிப்புத் துறையை முன்னணித்

2013 ஏப்ரல் 15]

துறையாக மாற்றியிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை தங்களின்வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 218, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

218—

காகித ஆலை

***6370—திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, அரிமழம் ஒன்றியத்தில் காகித ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஒரு காகித தொழிற்சாலை நிறுவப்பட வேண்டுமானால், மூலதனமாக 1,200 கோடி ரூபாயும், சுமார் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பும், ஆண்டு ஒன்றுக்கு 6 இலட்சம் மெட்ரிக் டன் அளவு கொண்ட கரும்புச் சக்கையும், 1 இலட்சத்து 5 ஆயிரம் டன் கொண்ட கூழ் மரங்களும் தேவைப்படுவதால், மாண்புமிகு உறுப்பினர் கோரும் திருமயம் தொகுதி, அரிமழம் ஒன்றியத்தில் தேவையான மூலப்பொருள்கள் கிடைக்க வாய்ப்பு இல்லையென்றாலும், வேறு தொழில்கள் தொடங்க தொழில்முனைவோர்கள் முன்வருவார்களானால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலித்து தொழிற்சாலை அமைப்பதற்குரிய ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.*